FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213017

1 District : Chennai PS: Chennai city-I Year: 2025 FIR No.: 4/2025/AC/CC-I Date: 11.09.2
மாவட்டம் காவல்நிலையம் VGAC ஆண்டு மு.த.அ. எண் நாள் 09.30hrs

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: U/S 7 of P
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Prevention of
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Corruption Act 1988 (Amended 2018)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 22.07.2025 Date to : 10.09.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 11.09.2025 Time : 09.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 8 Kms South
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : E. Ajesh (b) Father's/ Husband's Name : Suresh kuma
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 14.04.2005 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Manager of SPA (g) Address : No. 75, South Mada street, Madurvoyal, Pallavan Nagar Chennai -
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
To. Elangovan, Station Fire Officer, Virugambakkam Chennai - 89

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No - delay

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank Inspector.... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி. அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

M. Priya

15 Date & Time of despatch to the court: 11.09.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Inspector of Police
Rank: நிலை .....No. எண்.....1
Chennai city-1
VGAC, Alandur, Chennai-16

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-1 குற்ற எண்.04/AC/2025/CC-I சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.12 -ன் தொடர்ச்சி பின்வருமாறு</u>

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது : 11.09.2025-ந் தேதி காலை 09.00 மணியளவில், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-1 காவல் ஆய்வாளர் M.பிரியா ஆகிய நான், அலுவலகத்தில் இருந்தபோது, சென்னை, பல்லவன் நகர், மதுரவாயல், தெற்கு மாட வீதி, எண்.75 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. அஜேஷ், த/பெ. சுரேஷ்குமார், என்பவர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-1 அலுவலகம் வந்து, காவல் ஆய்வாளராகிய என்னிடம் தட்டச்சு செய்த எழுத்து மூலமான புகார் மனுவை கொடுத்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையகத்திற்கு தகவல் தெரிவித்து, புகார் மனு சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விருகம்பாக்கம் தீயணைப்பு அலுவலகத்தில் பணிபுரியும் Station Fire Officer திரு.இளங்கோவன் மற்றும் புகார்தாரர் திரு.அஜேஷ் ஆகியோரின் முன் நடத்தையும், புகார்மனுவின் உண்மைதன்மையும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. எனது ரகசிய விசாரணையில் புகார் மனுவில் குற்றச்சாட்டிற்கான முகாந்திரம் இருப்பதால், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, அவர்களின் அனுமதி பெறப்பட்டு இப்புகார் மனுவின் தன்மைக்கேற்ப இன்று 11.09.2025 ந்தேதி காலை 0.30 மணிக்கு சட்டப்பிரிவு-7, ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 -ன் படி திரு.இளங்கோவன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் அஜேஷ் வயது 21, S/o சுரேஷ்குமார், எண்.75, தெற்குமாடவீதி, மதுரவாயல், பல்லவன் நகர், சென்னை, பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப்பிரிவு -1, ஆலந்துர், சென்னை-16. நான் மேலே சொன்ன விலாசத்தில் கடந்த ஒருவருடமாக எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தஊர் கேரளா நாங்கள் குடும்பமாக இங்கே வந்து செட்டிலாகிவிட்டோம். இதற்கு முன்னர் புரசைவாக்கம் பகுதியில் குடியிருந்தோம். எனது அப்பா டீ கடையில் வேலை செய்து வருகிறார். நான் கடந்த 5 மாதங்களாக திரு.ஷாஜிமேத்திவ் என்பவர் கலசம்மன் கோவில் அருகில் நடத்திவரும் சலூன் கடையை நிர்வகித்து வருகிறேன். என் ஓனர் தனியார் நிறுவனத்தில் Tax Asseser ஆக பணிபுரிந்து வருகின்றார். அவர் தற்போது முகலிவாக்கம் Ashram Avenue Back side -ல் புதிதாகSPA ஒன்றுதொடங்க இருப்பதால் அதற்காக முறையாக License பெற வேண்டி Zone -12 அலுவலகம் சென்று விசாரித்த போது அவர்கள் எங்களிடம் முதலில் Fire மற்றும் Police department License அனுமதி வாங்கி வரும்படி கூறினார்கள். அதன் படி நான் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் விருகம்பாக்கம் Fire Station க்கு சென்று விசாரித்தபோது

அங்கிருந்த போலிஸ் Fire Station Officer திரு.இளங்கோவன் அவர்களை சந்திக்குமாறும் தற்போது அலுவலகத்தில் இல்லை என்று அவருடைய செல்போன் எண் 7871757555 கொடுத்தார்கள் நான் அந்த செல்போனை தொடர்ப கொண்ட போது திரு.இளங்கோவன் அவர்கள் நேரிடையாக வருவதாக கூறினார். பிறகு 22.07.2025 ம் தேதி தீயணைப்பு அலுவலர் இளங்கோவன் SPA கடைக்கு வந்து தணிக்கை பார்த்து விட்டு கடையில் தீயணைப்பு உபகரணங்கள் 400 ச. அடி-க்கு ஒன்று வீதம் என 3 வைக்குமாறு கூறினார். மேலும் அப்ளிகேஷன் தானே அப்ளை செய்து விடுவதாக சொல்லிவிட்டு விவரங்களை வாங்கிக்கொண்டு கடையை அவரது செல்போனில் எடுத்துக் கொண்டார். பிறகு Formality -யாக எனக்கு ரூ.25,000/- தர வேண்டும் மூன்று வருடத்திற்கு ஒரு முறை லைசன்ஸ் Renewal செய்ய வேண்டும் என்று கூறினார். நான் ஓனரிடம் பேசிவிட்டு சொல்கிறேன் என்று சொன்னவுடன் அவர் பேசிவிட்டு சொல் என்று என்னிடம் கூறிவிட்டு சென்றுவிட்டார். பிறகு நான் என் ஓனரிடம் பேசியபோது அவர் ரூ.25,000/-அதிகமாக இருக்கிறது. ஏதாவது பார்த்து செய்யும்படி கூறினார். பிறகு நான் ஓனர் கூறிய படி Station Officer திரு.இளங்கோவன் அவர்களிடம் கூறியபோது அவர் என்னிடத்தில் உயர் அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டும். அதனால் மொத்தமாக ரூ.15,000/- வேண்டும் என கேட்டார். எங்களுக்கு பணம் கஷ்டம் இருப்பதாக கூறினேன். சரி என்று பணத்தை குறைத்து ரூ.12,000/-கொடுத்து விடு என்று 07.08.2025 -ம் தேதியன்று வருமாறு கூறினார். அதை பற்றி நான் ஓனரிடம் கூறியபோது ஒத்துகொள்ளவில்லை. பணம் ஏதும் இல்லாமல் செய்துதரும்படி கேட்க சொன்னார். நானும் 11.08.2025 -ம் தேதியன்று போய் கேட்டு பார்த்தேன். அதற்கு Station Officer கண்டிப்பாக செய்ய முடியாது. எனது மேல் அதிகாரிகளுக்கு தந்தால் தான் கையெழுத்து போடுவார்கள் அதனால் ரூ.2,000/- குறைத்து கொண்டு ரூ.10,000/- தரும்படி கூறினார். நானும் ஓனரிடம் பேசிவிட்டு இரண்டு நாள் கழித்து வருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன் என் ஓனர் திரு.ஷாஜி அவர்களிடம் கூறிய போது அவர் பணம் தர விருப்பமில்லை என்று சொன்னார். பிறகு Station Officer என்னை செல்போனில் தொடர்பு கொண்டு பணம் சம்மந்தமாக என்னிடம் விசாரித்த போது என் ஓனர் சொன்ன விஷயத்தை சொன்னவுடன் அவர் என்னிடம் கோபமாக பேசி விட்டு லைசென்ஸ் அப்ளிகேஷனை reject செய்துவிடுவேன் என்று கூறினார். மேலும் நீங்கள் மீண்டும் அப்ளை செய்து கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் அவரிடம் reject செய்ய வேண்டாம் என்று கெஞ்சி கேட்டபோது, இப்போது நான் reject செய்கிறேன். நீங்கள் மீண்டும் அப்ளை செய்த உடன் எனக்கு தகவல் சொல்லுங்கள் என்று சொன்னார். அவர் சொன்ன படி மீண்டும் கடந்த 07.09.2025 ம் தேதி ஆன்லைனில் லைசன்ஸ் வேண்டி ஓனரின் அம்மா லிசிஜோசப் பெயரில் அப்ளை செய்யப்பட்டது அப்ளிகேஷன் ID NO. 325721. இந்த தகவலை அவருக்கு 08.09.2025 ம் தேதி Whastapp message மூலம் தெரிவித்தேன். அவர் எனக்கு போன் செய்து 09.09.2025 ம் தேதி அலுவலகத்தில் அவரை நேரடியாக சந்திக்கும் படி தெரிவித்தார். இந்த தகவலை எனது ஓனரிடம் சொன்ன போது சரி போய் பார்த்துவிட்டு வா என்று சொன்னார். அதன் படி நான் Station Officer திரு.இளங்கோவன் அவர்களை நேரடியாக சந்திக்க விருகம்பாக்கம் தீயணைப்பு அலுவலகத்திற்கு சென்ற போது அவர் அங்கு இல்லை நான் போன்

செய்தபோது அவர் எடுக்கவில்லை எனவே நான் திரும்ப வந்துவிட்டேன். பிறகு 10.09.2025 ம் தேதி மதியம் சுமார் 12.25 மணிக்கு எனக்கு whatsapp call ல் தொடர்பு கொண்டு நான் ஏற்கெனவே சொன்ன ரூ.10,000/- பணத்தை எடுத்துக் கொண்டு இன்று 11.09.2025 ம் தேதி வரச் சொன்னார் இந்த தகவலை எனது ஓனரிடம் சொன்ன போது அவர் பணம் கொடுக்க விருப்பமில்லை லஞ்ச ஒழிப்பு துறையில் என்னை சென்று புகார் கொடுக்கும்படி கூறினார். அவர் எனக்கு அளித்த உத்தரவு படி எங்கள் ஓனர் அம்மா பெயரில் Fire Licence வழங்க லஞ்சமாக ரூ.10,000/- கேட்ட Station Fire Officer திரு.இளங்கோவன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு (ஓம்) அஜேஷ் 11.09.2025 Sir, I received the above complaint on 11.09.2025 at 09.00 hrs.at my office and had discreet verification over the antecedents of the accused and bonafide of the complainant and after getting concurrence from the higher officers of the Directorate, I registered a case in V&AC Chennai City-I Cr.No.04/2025 u/s 7 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on this day 11.09.2025 at 09.30 hrs and taken up for investigation. Sd/- (M.PRIYA), INSPECTOR OF POLICE,V&AC, CC-I, Chennai. இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கணம் முதன்மை மாவட்ட நீதிபதி, திருவள்ளூர் அவர்களுக்கு அனுப்பியும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உரிய உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

M.Priya 11/09/25

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Chennai City - I Dett,
Alandur, Chennai- 16